மலர் : 1, இதழ் : 2

E - ISSN 2456 - 5571

சீர்மிகு

# வளர் தமிழ் ஆய்வு

## (பன்னாட்டு ஆய்விதழ்)

யாதும் ஊரே

யாவரும் கேளிர்

முதன்மைப் பதிப்பாசிரியர்

**முனைவர் சி. மைக்கேல் சரோஜினி பாய்**

வளர் தமிழ் ஆய்வு மன்றம்

திண்டுக்கல்

**2022**

40. **சௌ.மோதிலால் நேரு**
வருங்காலச் சந்ததியினருக்கான கள ஆய்வு மனிதநேயப் பார்வை 146

41. **ஜி.மைக்கேல் சரோஜினி பாய்**
குடும்ப வன்முறை: பதிவும் தீர்வும் தியாகபூமி நாவலை முன்வைத்து 151

42. **சி.யசோதா**
சூழலியற் பண்பாட்டு ஆய்வு நோக்கில் திருக்குறள் 155

43. **மோ. யுவராஜ்**
வேதாத்திரியத்தில் பாலியல் சமன்பாடுகள் 158

44. **பா.ரதிதேவி**
சங்க இலக்கியங்களில் கையறு நிலை 161

45. **பா. ரம்யா**
பரதவர்களின் தொழிற்கருவிகள் 165

46. **ரா.ரமேஷ்**
எஸ்.அர்ஷியாவின் 'மொய்' சிறுகதையில்
'தாய்மாமனின் சீர்வரிசை' குறித்த பதிவுகள் 171

47. **த.ரவிசந்திரன்**
'சிறுஇசை' வழி வண்ணதாசனின் இயற்கைச் சூழல் 175

48. **க.ராமசாமி**
கோஹா : உலகின் முதல் திறந்த மூல நூலக மேலாண்மை மென்பொருள் 178

49. **கா. ராஜேஷ்**
பாரதியார் கட்டுரைகளில் வெளிப்படும் பெண் விடுதலைக் குறிப்புகள் 182

50. **ந.ராஜேஸ்வரி**
வேதாத்திரி மகரிஷியின் "ஆசை சீரமைத்தல்" 186

51. **அ. ராஜன்**
பெருமாள் முருகனின் கங்கணம் புதினம் விவாதிக்கும்
திருமண ஏக்கங்களும் கள யதார்த்தங்களும் 188

52. **சு.ரேணுகா**
"கண்ணகியின் சினம்"- வழக்குரை காதையிலும்
கொங்கைத் தீ நாடகத்திலும் - ஒப்பீடு 192

53. **நா. ரேணுகா**
தாமோதரமும் சாமிநாதமும் 195

54. **க.ரேவதி**
மண்ணும் மனிதர்களும் 199

55. **க. லதா**
பாரதியின் பாடல்களில் வானியல் 202

56. **ப.லிங்கம்**
நாலடியார் நவிலும் நிலையாமை 206

57. **சு.லோகிதா**
பாவாணரின் கருத்து வெளிபாட்டு உத்தி 210

58. **அ.வளர்மதி**
அகத்திணைக்கொள்கைகள்-ஒரு பார்வை 213

59. **வாசுகி ஜெயரத்னம்**
ஓஷோவின் கருத்தியலில் பெண்-அதிகாரப்படுத்துதல் 218

# தாமோதரமும் சாமிநாதமும்

'தமிழ் தந்த தாமோதரனார்' என்று யாழ்ப்பாணத்துத் தமிழ்ச் சான்றோர்களால் போற்றியுரைக்கப்பட்ட சி.வை.தாமோதரம் பிள்ளையின் தமிழ்ப் பணி அளவிடற்கரியது. இவர், ஆறுமுக நாவலரின் பாரம்பரியத்தைச் சார்ந்த சுவடிப் பதிப்பாசிரியராகத் திகழ்ந்தார். இவரது பதிப்பு நூல்கள் தமிழ் ஆய்வுலகிற்குப் பெருந்துணையாகின்றன. தொல்காப்பியம், இறையனாரகப் பொருள், வீரசோழியம், கலித்தொகை, இலக்கண விளக்கம் முதலிய இவரது பதிப்பு நூல்கள் தமிழுலகம் பெற்ற பெருஞ்செல்வங்கள். 'தமிழ்த் தாத்தா' என்று தமிழ் மக்களால் சிறப்பிக்கப்பட்ட உ.வே.சாமிநாதையரின் தமிழ்ப் பணி எண்ணி வியக்கத்தக்கது. தம் வாழ்நாளில் 90க்கும் மேற்பட்ட நூல்களைப் பதிப்பித்து வெளியிட்ட பெருமகனார். இவரது பதிப்புகளில் பழந்தமிழ் இலக்கியங்களும் காப்பிய இலக்கியங்களும் இலக்கண நூல்களும், சிற்றிலக்கிய நூல்களும் அடங்கும். இவ்விருவரும் இல்லையெனில் பழந்தமிழ் இலக்கியங்களில் பலவற்றை நாம் இழந்திருப்போம்.

இருவரும் சுவடிப் பதிப்புப் பணி அச்சுப் பணியிலிருந்து நகர்த்திப் பதிப்புக் கலையாக உயர்த்தினர். தமிழியல் ஆய்விற்குப் புதுப் பாதைகளை வகுத்துக் கொண்டு, மற்றவர்களுக்கும் வழிகாட்டினர். இத்தன்மையாலே இவ்விருவரின் பதிப்பு நிலைப்பாட்டை ஒப்பிட்டு ஆய்வது தமிழியல் ஆய்விற்குப் பயன்தருவதாகும் என்ற நோக்கில் இவண் ஒப்பிட்டு ஆயப்படுகிறது. இதனூடாக,

- பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழகச்சூழலிலும் ஈழத்துச் சூழலிலும் நிலவிய சுவடிப் பதிப்புச் செயல்பாடுகள்
- சுவடிப் பதிப்புகளின் வழி தமிழுலகம் பெற்ற பழந்தமிழ் இலக்கிய, இலக்கண நூற் பிரதிகள்
- பதிப்பு முன்னுரைகள் வழி அறியலாம் ஆய்வுத் தரவுகள்

முதலான கருத்துகளைப் பெற முடிகிறது.

### பதிப்புலகில் பதிப்பு முன்னோடிகள் இருவர்

பதிப்புத் துறையில் ஆழங்கால்பட்டவராகத் தாமோதரம் பிள்ளையும் சாமிநாதையரும் விளங்குகின்றனர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சுவடிப் பதிப்புப் பணியில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு, தமக்குரிய காலமாக ஆக்கிக்கொண்டவர் தாமோதரம் பிள்ளை. தொல்காப்பியம் முழுமையையும் உரையுடன் வெளியிட்டார். செவ்வியல் நூல்களில் இடம்வகித்துள்ள மற்றொரு இலக்கண நூலான இறையனார் களவியலை நக்கீரர் உரையுடன் முதன்முதலில் பதிப்பித்தார். இவ்விரு பதிப்புகளே போதும் தாமோதரம் பிள்ளையின் சிறப்பினை எடுத்துரைப்பதற்கு என்று பண்டிதமணி சி. கணபதிப் பிள்ளை குறிப்பிடுகிறார். இதனை.

"சி.வை.தாமோதரம்பிள்ளை அவர்களின் பதிப்புக்களில், இறையனார் களவியலுரையும் தொல்காப்பியப் பொருளதிகாரமும் தமிழன்னையின் இரு கண்மணிகள். இந்த இரண்டனையும் பதித்துதவியதே சி.வை. தாமோதரம் பிள்ளை அவர்களுக்கு இம்மைக்கும் மறுமைக்கும் போதுமானது."[1] என்று 'தாமோதரம்' நூலின் அணிந்துரையில் அணி செய்துள்ளார். உ.வே.சா. பதிப்புலகில் நுழைகின்றபோதே, தமிழ்ச்சமூகம் நன்கறிந்த பதிப்பாசிரியராக சி.வை.தாமோதரம் பிள்ளை விளங்கினார். சி.வை.தாமோதரம் பிள்ளையின் பதிப்புப்பணியை உ.வே.சா. அவர்கள் வியந்து போற்றியுள்ளார். தமிழன்னை கண்டெடுத்த தலைமகனாராக உ.வே.சாமிநாதையர் விளங்கினார். பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தம் பதிப்புப் பணியைத் தொடங்கி, இருபதாம் நூற்றாண்டிலும் தமிழ்ப் பணியாற்றிய அவர் பெருமகனார். சங்க இலக்கியங்களில் பெரும்பான்மை இவர் பதிப்பித்த நூல்களே ஆகும். பத்துப்பாட்டு முழுவதையும் நச்சினார்க்கினியர்

முனைவர் நா. ரேணுகா பாத்திமா கல்லூரி (தன்னாட்சி), மதுரை.